# பிராம்டன் நகரில் வாடகைக்கு விடப்படும் அனைத்து கட்டிடங்களுக்கும் உரிமம் பெற வேண்டும்

வாடகைக்கு விடுவதற்கான உரிமம் (RRL) பெறும் திட்டத்தின்படி, தங்கள் கட்டிடங்களில் ஒன்று முதல் நான்கு வரையிலான வாடகைக்கு விடும் அலகுகள் கொண்ட அனைத்து கட்டிடங்களுக்கும் உரிமம் பெற்றாக வேண்டும். உரிமம் பெற்றிருக்காத வாடகைக்கு விடும் கட்டிடங்கள் சட்டத்திற்கு புறம்பானவை, மற்றும் பிராம்ப்டன் நகரில் அப்படி வாடகைக்கு விட முடியாது. இந்தத் திட்டமானது நகரில் வாடகைக்கு விடும் அலகுகள் பாதுகாப்பாக, நன்கு-பராமரிக்கப்பட்டதாக இருப்பதை உறுதி செய்கிறது.

**உரிமம் பெறுதல் கீழ்கண்டவற்றுக்கு பிரயோகமாகும்:**

- **ஒற்றை வசிப்பிடங்கள்:**
  கூடுதல் அலகுகள் இல்லாத முழு குடியிருப்பகம்.
- **இரண்டு அலகுகள் கொண்ட வசிப்பிடங்கள்:**
  முதன்மை குடியிருப்பகம் மற்றும் கூடுதலாக வாடகைக்கு விடப்படும் ஒரு அலகு.
- **பல அலகுகள் கொண்ட வாடகைக்கு விடப்படும் வசிப்பிடங்கள்:**
  ஒன்றுக்கு மேற்பட்ட கூடுதல் வாடகைக்கு விடப்படும் அலகுகள், மூன்று வசிப்பிடங்கள் (triplex), நான்கு வசிப்பிடங்கள் (fourplex), மற்றும் தோட்டத்துடன் கூடிய பங்களா.

**பதிவு செய்யப்படாத அல்லது உரிமம் பெற்றிருக்காத அலகை வாடகைக்கு விடுவது கடுமையான குற்றமாகும்:**

- Fஇணக்கமின்மைக்காக $750 முதல் $1,500 வரையிலான அபராதங்கள் விதிக்கப்படும்
- சட்டத்திற்குப் புறம்பான கட்டுமானம் அல்லது கட்டிடம் கட்டுவதற்கான நெறிமுறைமீறல் போன்றவற்றுக்கு குறிப்பிடத்தக்க வகையிலான அபராதமாக $500,000 வரை விதிக்கப்படலாம்

**இப்போதே உரிமம் பெற்றிடுங்கள்**

**brampton.ca**/RRL

BRAMPTON

Tamil

# குடியிருப்பை வாடகைக்கு விடுவதற்கான உரிமம் பெறுவது எப்படி

**செயல்படி 1:**
**அலகுகளைப் பதிவு செய்யவும்**
(பொருந்தினால்)

கூடுதலாக இருக்கும் அனைத்து குடியிருப்பு அலகுகளையும் பதிவு செய்யவும், இதில் தோட்ட வீடுகளும், இரட்டை வசிப்பிடங்கள், மூன்று வசிப்பிடங்கள் (triplex), நான்கு வசிப்பிடங்கள் (fourplex), ஆகியவை அடங்கும்.

**செயல்படி 2:**
**உங்கள் கட்டிடத்தைத் தயாராக்குங்கள்**
வாடகைக்கு விடப்படும் அனைத்து அலகுகளும் பாதுகாப்பு மற்றும் தீத்தடுப்பு மற்றும் கட்டிடங்களுக்கான தரநிலைகளுடன் இருப்பதையும் உரிய காப்பீடு கொண்டிருப்பதையும் உறுதி செய்யவும்.

**செயல்படி 3:**
**ஆன்லைனில் விண்ணப்பிக்கவும்**
ஆன்லைன் விண்ணப்பத்தை தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பிக்கவும். உரிமத்திற்கான விண்ணப்பம் செய்ய கட்டணம் ஏதுமில்லை.

**செயல்படி 4:**
**உரிமம் வழங்கப்படும் விதம்**
உங்களுக்கான உரிமம் மின்னஞ்சல் செய்யப்படும். அதனை நீங்கள் வாடகைக்கு விடும் அலகில் காட்சிக்கு வைக்கவும் மற்றும் இணக்கமாக இருப்பதைப் பேணி வருடம்தோறும் புதுப்பிக்கவும்.

**brampton.ca**/RRL

BRAMPTON